# வெண்ணிக்குயத்தியாரும் வெண்ணிப் பறந்தலையும்

23

**முனைவர் சீ செஞ்சுலட்சுமி,**

**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,**

**ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரி, குரோம்பேட்டை,**

**சென்னை - 600 044.**

**மின்னஞ்சல் -** chenjulakshmi1972@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சங்ககாலப் பெண்பாற் புலவர்களுள் சிறந்தவராகிய வெண்ணிக்குயத்தியார் பாடலில் பொதிந்துள்ள சோழனின் வெற்றியும், சேரனின் தன்மான உணர்வும் குறித்து எழுத முற்பட்டதால் வெண்ணிக் குயத்தியாரும் வெண்ணிப்பறந்தலையும் என்பதே ஆய்வுப் பொருண்மையாக்கப்பட்டுள்ளது. வெண்ணி என்னும் ஊரின் வணிகமும், போர்ச்சிறப்பும், வடக்கிருத்தலின் வலிமையும் குறித்து குயத்தியார் தம் ஒரே ஒரு பாடல் நமக்குப் புலப்படுத்துகின்றது. வெண்ணிப்பறந்தலைப் போரை வெகு சிறப்பாகத் தாம் பாடிய ஒரே ஒரு பாடலில் கற்போர் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்த காரணத்தால் வெண்ணிக்குயத்தியார் என்ற பெயர் அவருக்கு வழங்கப்பட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றும் அளவிற்குச் சிறந்த பாடலாக இப்பாடல் விளங்குகின்றது.

**திறவுச்சொற்கள் :** வெண்ணிப்பறந்தலை, குயத்தி, வடக்கிருத்தல், நாவாய் வளிதொழில்

**முன்னுரை**

சங்கப் பெண்பாற்புலவர் பலருள்ளும் தாம் பாடிய ஒரே ஒரு பாடலால் புகழ்பெற்றவர் என ஆதிமந்தியார், வெண்ணிக்குயத்தியார் ,குப்பைக் கோழியார், எனச் சிலரைக் குறிப்பிடலாம். இவர்கள் பாடியது அகப்பாடலோ, புறப்பாடலோ அவற்றுள்ளும் இவர்களின் மன உணர்வும்,சமூக அக்கறையும் வெளிப்பட்டு நிற்கும் திறத்தைக் காண இயலும். இன்னும் சொல்லப் போனால் அகப் பாடலில் புறக்கருத்தும் புறப்பாடலில் அக உணர்வும் என மனித மனம் மாறி மாறிச் சிந்திக்கும் ஆற்றல் உடைத்து என்பதைத் தம் பாடல்கள் வழிப் புலப்படுத்தியுள்ளமை புலனாகும். அவர்களுள் வெண்ணிக் குயத்தியாரின் பாடல் வழி அறியலாகும் வெண்ணிப்பறந்தலைப் போர் குறித்த செய்திகளும் புலவர்தம் உளத்திறம் குறித்தும் கட்டுரைப் பொருண்மை அமைந்துள்ளது. கரிகாலனின் புகழுக்குப் பெரும் காரணமாக அமைந்த வெண்ணிப் பறந்தலைப்போர் வெண்ணி என்னும் அவனது ஊரில் நடைபெற்றது. எனவே இந்த ஊரின் சிறப்பு இங்கு நோக்கற் பாலது.

**வெண்ணி: வெண்ணிக்குயத்தியார்**

சோழ நாட்டில் நீடாமங்கலத்திற்கு மேற்கே உள்ள ஊர் வெண்ணி. இது தேவாரப் பாடல் பெற்ற தலமாக விளங்குகிறது. இதனை வெண்ணி, கோயில் வெண்ணி என்றும் அழைப்பர். காலப்போக்கில் கோயில் உண்ணி என்றும் வழங்கலாயினர். இவ் வெண்ணி என்ற சொல்லுக்கு மலர் என்ற பொருளும் உண்டு. தற்காலத்தில் நந்தியாவட்டை மலர்தான் அக்காலத்தில் வெண்ணி என அழைக்கப்பட்டது. கரிகால் சோழனுக்கும், சேரலாதனுக்கும் இடையே நடந்த புகழ்பெற்ற போராக இவ்வண்ணிப்பறந்தலைப் போரைச் சுட்டுவர். இப்போர் குறித்த செய்திகள் அகநானூறு 55 ஆவது

பாடலிலும் புறநானூறு 65 ஆவது மற்றும் 66 ஆவது பாடலான வெண்ணிக்குயத்தியார் பாடலின் மூலமாகவும் அறியலாம். வெண்ணிப்பறந்தலை என்பது வெண்ணி என்னும் ஊரை அடுத்த மிகப்பெரிய போர்க்களமாக இருந்திருப்பதை இவர்களின் போர்ச் செய்தி மூலம் அறியலாம். இவ்வாறாகப் பல்வேறு சிறப்புகளைக் கொண்டு இலங்கும் இவ் ஊரில் தோன்றியவர் வெண்ணிக்குயத்தியார். வெண்ணி என்னும் ஊர்ப் பெயரோடு அவரது குலப்பெயராகிய குயத்தி என்பதை இணைத்துத் தம் பெயரை வெண்ணிக்குயத்தி என்று வைத்துக் கொண்டுள்ளார். ஆர் என்பது சிறப்பு நோக்கி எழுந்தது. தொல்காப்பியர் குறிப்பிடும்

**மக்கள் நுதலிய அகனைந்திணையும் சுட்டியொருவர் பெயர் கொளப்பெறாஅர்** 1

என்பதற்கேற்ப இவர் தமக்கான இயற்பெயரைக் குறிப்பிடாது தம் ஊரும், ஊருடன் குலத்தொழில் பெயரையும் இணைத்து வெண்ணிக் குயத்தி என வைத்துக் கொண்டுள்ளார். அகப் பாடலுக்கே உரிய சுட்டி ஒருவர் பெயர் கொளப்பெறா மரபினைப் பின்பற்றி உள்ளார் போலும். மேலும்

**கடலன்ன காம முழந்தும் மடலேறாப் பெண்ணின் பெருந்தக்க தில் 2**

என்ற வள்ளுவரின் அக மரபிற்கு ஏற்ப புறப் பாடலைத் தாம் பாடினாலும் இயற்பெயரை அவர் யாங்கணும் குறிப்பிடவில்லை என்பது நோக்கத்தக்கது. மேலும் போரில் ஈடுபட்ட மன்னர் இருவருள்ளும் பகை மன்னனாகிய சேரலாதனை நின்னினும் நல்லன் எனப் புகழ்வதால் ஆண்களை நேரில் சந்தித்து பெண் பேசாத அந்தக் காலத்தில் அவர்கள் இருவரையும் நல்லன் எனக் கூறிப்போந்ததால் தம் பெயரைக் குறிப்பிடவில்லை என்றும் கருத இடம் உண்டு

**வெண்ணிப்பறந்தலைப் போர்**

கரிகாலனுக்கும் பெருஞ்சேறல் இரும்பொறைக்குமிடையே வெண்ணிப் பறந்தலையில் நடந்த போரில் சோழன் எய்திய அம்பு சேரனின் மார்பில் பாய்ந்துப் புறம் தைத்ததை எண்ணி நாணித் தன்னைத் தைத்த வேலைப் பிடுங்கி எறிந்து வடக்கிருந்து உயிர் துறந்தான் சேரன். இதனைப் பொறுக்க மாட்டாத அவனது படை வீரர்களும் கணவனை இழந்த மனைவி உடன்கட்டை ஏறுதல் போலத் தாமும் வடக்கு இருந்து உயிர் துறந்தனர். இதனை அகநானூற்றில் செவிலி ஒருத்தி, தம் மகளாகிய தலைவி உடன் போக்கு மேற்கொண்டதைக் கேட்டவுடன்

**கரிகால் வளவனோடு வெண்ணிப் பறந்தலைப்**
**பொருது நாணிய சேரலாதன்**
**அழிக்கள மருங்கில் வாள் வடக்கி ருந்தென,**
**இன்னா இன்னுரை கேட்ட சான்றோர் அரும்பெறல் உலகத்து அவனொடு செலீஇயர்**
**பெரும்பிறிது ஆகியாங்கு பிரிந்து இவண் 3**

என்று கரிகாலனுடன் வெண்ணிப் பறந்தலையில் போரிட்டு வடக்கு இருந்து உயிர்த்துறந்த சேரலாதனுடன் அவன் ஊர்ப் போர் வீரர்களும் உயிர்த்துறந்தனர். அதேபோல் என் மகள் என்னைப் பிரிந்தாள் எனக் கேட்டும் யான் அவர்களைப் போல் பொன்னுலகம் போகாது ஊதுலைக்கருவி போல பெருமூச்செறிந்து உயிரோடு இருக்கின்றேன் என வருந்திக் கூறுவதாக மாமூலனார் பாடல் எடுத்துரைக்கின்றது. இப்பாடலிலும் சோழனின் வெற்றியைக் கொண்டாடாது சேரனின் வடக்கிருந்து உயிர்த்துறத்தல் தான் போற்றப்பட்டிருக்கிறது. எனவே வெண்ணிப் பறந்தலைப்போர் சோழனைக் காட்டிலும் சேரனுக்கு மிகு புகழ் ஈட்டி தந்தது எனில் தகும். மேலும் பொருநராற்றுப்படையில் முடத்தாமக்கண்ணியார்,

**தலைக்கோள் வேட்டங்கு களிறட்டா அங்**

**கிரும்பனம் போந்தைத் தோடும் கருஞ்சினை**

**யரவாய் வேம்பினங் குழைத் தெரியலும்**

**ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த**

**விரு பெரு வேந்தரு மொரு களத்தவிய**
**வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்**

**கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்** 4

என்று இரு பெரும் வேந்தராகிய சேரனும் பாண்டியனும் ஒருசேர அவிய என இப்போரைப் பாடியுள்ளார். ஆனால் வெண்ணிக் குயத்தியார், மாமூலனார் கழாஅத்தலையார் என அனைவரும் சேரன் மாண்டதைப் பற்றி மட்டுமே பாடியுள்ளனர்.இப் போர் குறித்த முரணிய சிந்தனைகள் இரு வேறு உள. அவற்றுள் ஒன்று சேர நாடு வேழ முடைத்து என்ற முதுசொல் பொய்த்துப் போகும் படிச் சோழனின் மதயானைகள் சேரனின் படையைத் தூக்கி எறிந்தது. அதனால் தான் குயத்தியார்

**களிஇயல் யானைக் கரிகால் வளவ 5**

என்றார். மற்றொன்று சோழ நாடு சோறுடைத்து என்ற சொல்லையும் பொய்யாக்கிப் பறந்தலைப் போரில் தோற்ற சேரலாதன் உண்ணாது வடக்கிருந்து உயிர்த்துறந்தான். ஏனெனில் **உயிரினும் சிறந்தன்று நாணே 6** என்பது பெண்பாற்கு மட்டுமின்றிப் **பெருமையும் உரனும் ஆடூஉ மேன** 7 என்பதற்கேற்பப் புறப்புண்ணிற்காக நாணி வடக்கிருந்த பெருமையும், கரிகாலன் மிகச்சிறந்த போர்வலான் என்பதை அறிந்தும் அவனிடம் போர் புரிய அவன் எல்லைக்கே வந்து அவனை எதிர்த்த உரமும் சேரலாதனுக்கு உரித்தாயிற்று. ஆகையால் தான் வெண்ணிக்குயத்தியாரும்

**சென்று அமர்க்கடந்த நின் ஆற்றல் தோன்ற**
**வென்றோய்! நின்னினும் நல்லன் அன்றே-**

**களிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை,**

**மிகப் புகழ் உலகம் எய்திப் புறப்புண் நாணி வடக்கிருந்தோனே 8**

என்று அரசவாகைத் துறையால் கரிகாலனைப் பாராட்டினாலும் அணி இலக்கணமாகக் கொள்ளும் போது சேரன் போரில் தோற்றாலும் புறப்புண் நாணி வடக்கிருந்தான் என வஞ்சப்புகழ்ச்சியில் பாடியுள்ளார். இங்குப் புலவர் சேரன்மீது காதல் கொண்டு இவ்வாறு பாடி இருக்கலாம் அல்லது கரிகாலன் தம் மீது காதல் கொண்டுள்ளானா என அறிய அவன் உளமறியும் நோக்கில் கூடப் பாடி இருக்கக்கூடும்.

**பரந்த அறிவும் திண்ணிய நெஞ்சும்**

வெண்ணிக்குயத்தியார் பறந்த அறிவையும் திண்ணிய நெஞ்சத்தையும் கொண்டவர். ஏனெனில் சங்க காலத்தில் பெண்பாற் புலவர் பலர் இருந்தாலும் அவர்தம் மன உணர்வுகளை அகப்பாடல்களில் அக மாந்தர்களாகிய தலைவி, தோழி கூறும் கூற்றுகள் போலவே பாடியிருந்தனர். ஆனால் குயத்தியாரோ தாம் பாடிய ஒரே பாடல் அதுவும் புறப்பாடல் அப்பாடலில் சோழ நாட்டு அரச பரம்பரையைப் புகழ்ந்து கூறும் போது,

**நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி வளி தொழில் ஆண்ட உறவோன் மருக 9**

என்கிறார். காற்றின் திசை அறிந்து கடலில் கலத்தைச் செலுத்தக்கூடிய அறிவில், அறிவியலில் சிறந்த சோழ அரசர்களின் வழித்தோன்றல் கரிகாலன் என்கிறார். இதே கருத்தைக் கடியலூர்

உருத்திரங் கண்ணனார் பட்டினப் பாலையில்

**வெளி லிளக்குங் களிறு போலத்**

**தீம் புகார்த் திரை முன்றுறைத் தூங்குநாவாய் துவன்றிருக்கை 10**

என்று சோழர் புகார் நாட்டுத் துறைகளில் களிறு போல அசையும் இயல்பை உடைய மரக்கலங்கள் நின்றிருத்தலைக் காட்சிப்படுத்தியுள்ளார். இது கரிகாலனின் முன்னோர் தொடங்கி அவன் வரையிலும் நாவாய் கொண்டு திரைகடலோடி திரவியம் தேடிய பெருமையைப் பறைசாற்றும். மேற்கூறிய செய்திகளை ஓர் ஆண்பாற்புலவர் பாடியது பெருமிதம் அன்று ;குயத்தியார் பாடியதுதான் மிகப் பெருமை. ஏனெனில் காற்றின் திசைக்கேற்பக் கலத்தைச் செலுத்தும் அறிவினை மண்ணீட்டாளராகிய வெண்ணிக்குயத்தியார் அறிந்திருத்தல் அவரது அறிவியலறிவின் உச்சம். மண்ணைப் பிசைந்து மண் பாண்டத்தை வனையத் தெரிந்தவருக்கு விண்ணை அளந்து காற்று வீசும் திசையறிந்து கலத்தைச் செலுத்தும் முறைமையும் தெரிந்திருக்கிறது. மேலும் காற்றின் திசையறிந்து கலத்தைச் செலுத்தியவன்; வலிமை பொருந்திய யானைப் படையை உடையவன்; அவன் ஆற்றல் பறந்தலைப் போரில் தெரிந்தது என்றும் கரிகாலன் நல்லன் என்றும் பலவாறு புகழ்ந்து விட்டு இறுதியில்

**நின்னினும் நல்ல னன்றே**

**கலி கொள் யாணர் வெண்ணிப்பறந்தலை,**

**மிகப் புகழ் உலகம் எய்தி புறப்புண் நாணி வடக்கிருந்தோனே 11**

என்று நின்னைவிட நல்லவன் சேரன் என அவன் வடக்கிருந்து உயிர்த்துறந்ததைப் பெரிதும் போற்றியுள்ளமை நோக்கற் பாலது. இதிலிருந்து இரு வேறு செய்திகள் புலப்படுகின்றன. ஒன்று சேரனின் தன்மான உணர்வு. மற்றொன்று கரிகாலனின் வீர உணர்வு. சேரன் கரிகாலனின் எல்லைக்குட்பட்ட வெண்ணிப் பறந்தலையில் வந்து முற்றுகையிட்டான் என்றால் அவனது வீரத்தைப் போற்றும் அதே நேரம் கரிகாலனின் பகைவர் திறம் குறித்து அறியும் உளவியலையும் அறிய முடிகின்றது. எதிரியை தம் ஊரில் புகவிட்டு அவனை வீழ்த்திய ஆற்றல் சார்ந்த வீரன் என்பதைச் சாதாரணமாக அவனை நல்லன் என்று கூறிவிட்டுத் தோற்றவனை நின்னினும் நல்லன் என்று கூறியுள்ளார். பெருவளத்தான் மீது பெண்கள் பலர் காதல் கொண்டதைப் போலக் குயத்தியாரும் ஒருதலையாகக் காதல் கொண்டு இதுவரை தன்னைக் காதலோடு காணாத கரிகாலனைத் தம்மைத் திரும்பி பார்க்க வைப்பதற்காகக் கூடப் பகைவனை நின்னினும் நல்லன் என்று கூறியிருக்கலாம். ஏனெனில் கரிகாலன் தமக்கு மட்டுமே உரிமை உடையான் தன் காதல் கரிகாலனுக்கு மட்டுமே உரித்து. அதனால் அவனுக்கும் அந்த எண்ணத்தைத் தோற்றுவிக்க வேண்டும் என்றும் நோக்கிலும் பகைவனை நின்னினும் நல்லன் எனக் கூறியிருக்கக்கூடும். மேலும் பகைவனைப் பாராட்டியுள்ள போது வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு என்று கரிகாலனின் வீரத்தைக் காட்டிலும் சேரனின் தன்மான உணர்வு முன்னிற்றலை உலகிற்கு எடுத்து ஓதவே கூறியிருக்கலாம் என்பது வெள்ளிடைமலை. இதனைப்

**புகழுடையார்க்கு அன்றி புறப் புண்ணுக்கு நாணுதல் உண்டாகலின் நாணுதலையே புகழ் என்றார். ஆற்றல் தோன்ற வென்று கொண்ட நின் புகழினும் விழுப்புண் பட்டும், புறப்புண் நாணியும் சேரமான் கொண்ட புகழ் போற்றத் தக்கதென்றற்கு நின்னினும் நல்லனன்றே 12**

என்று கூறியுள்ளார் உவேசா. மேலும் புறநானூற்றின் 65 ஆம் பாடலான கழாஅத்தலையார் பாடலில் கரிகாலனுக்கும் சேர லாதனுக்கும் இடையே நடந்த பறந்தலைப் போரில் சேரன் அழிந்ததை இருசுடராகிய மேற்கூறிய இருவருள்ளும் திங்களாகிய சேரன் மறைய ஞாயிறாகிய சோழன் மலர்ந்தான். இதனால் சேர நாட்டில் மக்கள் உண்பதை மறந்தனர்; எங்கும் துயர்; முழவு முழக்கம்

மறந்தது; இனிப் பகல் காலம் பண்டு போல் மகிழ்வாகச் செல்லாது என்பதனை

**இருசுடர் தம்முள் நோக்கி ஒரு சுடர் புன்கண் மாலை மலை மறைந்தாங்கு**

**------------------------------------------------**

**நாள் போல் கழியல ஞாயிற்றுப் பகலே 13**

என்று கையறுநிலைப் பாடலாகத் தந்துள்ளார். இவர் சேரனைப் புகழ்ந்தாலும், கரிகாலனையும் ஞாயற்றோடு ஒப்பிட்டுள்ளார். இவ்வாறாக வெண்ணிப்பறந்தலைப் போர் கழாஅத்தலையாருக்கு கையறு நிலையாகவும், மாமூலனாருக்குக் கதை சொல்லியாகவும் நடத்தாமல் கன்னியாருக்கு காதல் சொல்லியாகவும் அமைந்தது. இந்த ஒரு செய்தியை மட்டுமே தம் பாடல் முழுமையும் சொன்ன வெண்ணிக்குயத்தியாருக்கு இப்போர் குறித்த பாடல் அகப்பாடல்கவும், புறப்பாடலாகவும் அமைந்து கரிகாலனுக்காக அரசவாகையில் பாடினாலும் வஞ்சப்புகழ்ச்சி புகழ்ந்து சேரனின் தன்மான உணர்வையும் உலகுக்குப் பறைசாற்றியுள்ளார்.

**முடிவுரை**

வெண்ணிக்குயத்தியாரும் வெண்ணிப்பறந்தலையும் என்னும் பொருண்மையுள்ள இக்கட்டுரையில் கரிகாலனைக் காதலிக்கும் பெண்டிருள் தாமும் ஒருவர், அவன் தனக்கு உரிமை பூண்டவன் என்று அவனைப் புகழ்வதைப் போலச் சேர மன்னனைப் புகழ்ந்து அவனுள் தன் உரிமையை நிலை நாட்டுவதற்காகப் பாடியுள்ளமை புலப்படுகின்றது. இவ்வெண்ணிப்பறந்தலைப் போர் அகப்பாடல், புறப்பாடல் என அனைத்துப் பாடல்களுக்கும் கருத்துச் சான்றாக ஆண்டு கொள்ளும் படி அமைந்துள்ளது. கரிகாலனின் வீரமும், சேரனின் தன்மானமும் படிப்போர் நெஞ்சில் ஆழமாகப் பதிய வைக்கும் குயத்தியாரின் இந்த ஒரு பாடல் மூலம் பழந்தமிழரின் அறிவியல் நுண்ணறிவும் உளவியல் நுணுக்கமும் புலப்படுகின்றன. இதே போன்று ஒரே ஒரு பாடல் பாடிய புலவர் பலரின் பாடல்கள் பலவும் ஆய்வுக்குட்படுத்தித் தமிழியல் ஆய்வுப் பரப்பினை பெருக்கல் செய்தல் நலம்.

**சான்றெண் விளக்கம்**

1. சுப்பிரமணியன்.ச.வே(உ.ஆ) தொல்காப்பியம் தெளிவுரை பொருளதிகாரம்,ப- 374, மணிவாசகர் பதிப்பகம், 2000(மு.ப)
2. இராச பாண்டியன் (உ.ஆ)- திருக்குறள் தெளிவுரை,ப- 245, முக்கடல் பதிப்பகம், 2017(இ.ப)
3. சுப்பிரமணியன் ச.வே -(ப.ஆ)சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப-225, மணிவாசகர் பதிப்பகம், 2006 (மு.ப)
4. சோமசுந்தரனார் பொ.வே- (உ.ஆ) பத்துப்பாட்டு பகுதி 1,பக் - 20,21, கழக வெளியீடு, 2007
5. சுப்பிரமணியன் ச.வே -(ப.ஆ)சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப-444, மணிவாசகர் பதிப்பகம், 2006 (மு.ப)
6. சுப்பிரமணியன்.ச.வே(உ.ஆ) தொல்காப்பியம் தெளிவுரைபொருளதிகாரம்,ப- 416, மணிவாசகர் பதிப்பகம், 2000(மு.ப)
7. சுப்பிரமணியன்.ச.வே(உ.ஆ) தொல்காப்பியம் தெளிவுரைபொருளதிகாரம்,ப- 404, மணிவாசகர் பதிப்பகம், 2000(மு.ப)

8. சுப்பிரமணியன் ச.வே -(ப.ஆ)சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப-444, மணிவாசகர் பதிப்பகம், 2006 (மு.ப)
9. மேலது.
10. மேலது, ப-618
11. மேலது, ப-444
12. துரைசாமிப்பிள்ளை. சு(உ.ஆ) - உ.வே.சா குறிப்புரையுடன், புறநானூறு, ப-659, கழக வெளியீடு
13. சுப்பிரமணியன் ச.வே -(ப.ஆ)சங்க இலக்கியம் மூலம் முழுவதும், ப-444 மணிவாசகர் பதிப்பகம், 2006 (மு.ப)